கணவர் மருத்துவராக இருக்கிறார் என்கிற உணர்வோடு கணவருக்காக வாதாடுகிற பொறுப்பை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் அவர் தெரிவித்த கருத்திலே ஒரு குறை. இந்தச் சட்டம் வியாபாரிகளுக்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம் என்று சொன்னார்கள். அப்படியில்லை. வியாபாரிகளுக்கென்று பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. தவறு செய்வதை, கலப்படம் செய்வதைத் தடுப்பதற்கு கலப்படத் தடுப்புச் சட்டம், எடை-அளவுச் சட்டம் என்று பல சட்டங்கள் இருக்கின்றன. இந்தச் சட்டம் என்பது உலகம் முழுவதிலும் இப்பொழுது மக்களுக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டம். மக்களில் எல்லாப் பிரிவினரும் இதில் வருவார்கள். இன்னும் சொல்லப்போனால் மருத்துவர்களை இதிலே சேர்க்கக்கூடாது என்று வாதிடுகிறார்களே மருத்துவர்கள், அந்த மருத்துவர்களுக்கே துன்பம் என்று வருகின்றபொழுது அவர்களும் இந்த நீதிமன்றத்திற்குத்தான் வந்தாக வேண்டும். அவர்களுக்குச் சங்கடம் என்று வருகிறபோது இங்கே வந்தாக வேண்டும். ஆகவே, இது மக்களுக்காக இயற்றப்பட்ட ஒரு சட்டம். இதிலே எல்லாப் பிரிவினரும், மக்களுக்கு உண்மையாக, தூய்மையாக, அவர்கள் ஏற்றுக் கொண்ட தொழிலை நிறைவாகச் செய்கிறார்களா, சேவை செய்கிறார்களா என்பதைப் பரிசீலித்து, அதை நிறைவு செய்வதற்காக உருவாக்கப்பட்டிருக்கிற சட்டம். ஆகவே, மீண்டும் மருத்துவர்களை இதிலேயிருந்து விலக்களிக்க வேண்டும், சேர்க்கக்கூடாது என்கிற ஒரு விவாதத்தை இப்போதும் நாம் நீட்டிக் கொண்டிருப்பதில் பலன் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இருக்கையில் இல்லை.

வினா எண் 64, திரு. கா. சின்னசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

64—

கொல்லிமலையில் அரசு மருத்துவமனை அமைத்தல்

***24892-திரு. கா. சின்னசாமி :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொல்லிமலையில் அரசு மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1994 நவம்பர் 9]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கா. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் சுமார் 40 ஆயிரம் மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் மருத்துவ வசதி தேடிச் செல்ல வேண்டும் என்றால் 80 கி.மீ. தூரம் சேந்தமங்கலம் அல்லது நாமக்கல் சென்று வைத்தியவசதி பெற வேண்டிய நிலை உள்ளது. அந்தப் பகுதி மக்கள் நோயில் சிக்கிக்கொண்டால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே அந்த மலைவாழ் மக்கள் நலனைக் கருதி ஒரு புதிய அரசு மருத்துவமனையை அமைத்துக் கொடுப்பாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மக்கள் தொகை 33,888 பேர் என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அங்கே இருக்கின்றன. எனவே, ஏறத்தாழ 12 ஆயிரம் பேருக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் என்று இருக்கின்ற காரணத்தால்தான், புதியதாக ஒரு மருத்துவமனை ஆரம்பிக்க முடியாது என்று நாங்கள் தெரிவித்திருக்கிறோம். இருந்தாலும் ஹில்ஸ் ஏரியாவாக இருக்கின்ற காரணத்தால் அதைப்பற்றித் தனியாக ஆய்வு செய்ய முடியுமா அல்லது அங்கே இருக்கின்ற ஆரம்பச் சுகாதார நிலையத்தை தரம் உயர்த்திக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை ஆய்வு செய்யலாம். ஆனால் முடிந்த முடிவாக இப்பொழுது அறிவிக்க முடியாது.

திரு. கா. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில், அந்தப் பகுதி மக்கள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் இன்றைக்கு தொட்டிலில் தூக்கிக்கொண்டு செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அந்தப் பகுதியில் சிகிச்சை பெற்றுவர உடனடியாக ஆம்புலன்ஸ்-ஆவது மாண்புமிகு அமைச்சர் வழங்குவாரா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையிலேகூட பேருந்து வசதி ஏற்கெனவே

TRUTH ALONE TRIUMPHS

செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அங்கே இருக்கின்ற தனித் தன்மையைக் கருதி தனியாக ஆம்புலன்ஸ் கொடுக்க முடியுமா என்பதைப் பற்றி துறை அதிகாரிகளோடு பேசி, முடியும் என்றால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 65, திருமதி இலதா பிரியகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

65—

செய்யூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**26712-திருமதி இலதா பிரியகுமார் :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செய்யூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திருமதி இலதா பிரியகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். செய்யூர் கிராமம் பெரிய பஞ்சாயத்திலுள்ள கிராமம். அங்கே 5 கிராமங்கள் உள்ளன. அவை அவிநாஸ், கண்டிகை, கணிகாபுரம், செய்யூர் காலனி, செய்யூர் கிராமம். அரக்கோணத்திலிருந்து 10 கி.மீ. தூரத்தில் இருந்தாலும் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது மாதிரி பல நன்மைகள் அவர்களுக்கு வந்து சேருவதில்லை. பஸ் வசதியில்லை. ரோடுகள் வசதியும் இல்லை. அரக்கோணம் செல்வதற்கு சரியான முறையில் வசதிகள் இல்லாத காரணத்தினால், இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்துத் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.